தருமந்திரம்

விளக்கவுரையுடன்

கழக வெளியீடு

ஓம்

திருச்சிற்றம்பலம்

திருமூல நாயனார்

அருளிச் செய்த

திருமந்திரம்

மூவாயிரம்

[முதற் பகுதி]

(1 முதல் 5 தந்திரங்கள்)

கழகப்புலவர், சித்தாந்தபண்டிதர்

திரு. ப. இராமநாத பிள்ளை

எழுதிய விளக்கமும்,

துடிசைகிழார்,

திரு. அ. சிதம்பரனார்

எழுதிய குறிப்பும்

DR. T. P. M. LIBRARY,
MADURAI KAMARAJ UNIVERSITY.

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

154, டி. டி. கே. சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை - 18

பரமசிவன் பிள்ளை இராமநாத பிள்ளை (1891-1972)
துடிசைகிழார் அர்த்தநாரீ சுவர முதலியார்
சிதம்பரனார் (மறைவு - 1954)

© 2001 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.,

கிளைகள் :

சென்னை - 108 திருநெல்வேலி - 6 மதுரை - 1
கோயமுத்தூர் - 1 கும்பகோணம் - 1 சேலம் - 1
திருச்சிராப்பள்ளி - 2

250180

கழக வெளியீடு : 334.

முதற்பதிப்பு : ஆகஸ்டு 1942
மறுபதிப்பு : நவம் 1957 ; பிப்ர 1963; செப் 1969;
பிப்ர 1975; மார்ச்சு 1980; மே 1994
டிசம்பர் 1996 செப் 2001

Q 23 : 417 x 8
N 96 2 k 1

THIRUMANTHIRAM - Vol. II

கணிப்பொறி அச்சு : ஈசுவர் லேசர், சென்னை - 18.
Printed at : The J. J. Offset Printers, Ch-81. ✆ : 595 7328

பதிப்புரை

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். சிவன் என்னும் திருப்பெயர் உண்மை நிலையின்கண் உள்ளதாகும். இறைவன் என்னும் திருப்பெயர் சார்பு நிலையின்கண் உள்ளதாகும். இவ் விரு நிலையினையும் முறையே சிறப்பும் பொதுவும் என இசைப்பர். சிறப்பை அறிவுநிலையென்றும், பொதுவை ஆற்றல் நிலையென்றும் கூறுப. ஆற்றல் அறிவினுள் அடங்கி நிற்கும் நிலை உண்மை நிலையாகும். அறிவு ஆற்றலோடியைந்து அவ்ஆற்றல் தொழிற்படுநிலை சார்பு நிலையாகும். ஒருபுடை யொப்பாகக் கூறுங்கால் அருவுருவத் திருவுருவாம் சிவக்கொழுந்து அறிவுநிலையாகும். மற்றுக் கூத்தப்பெருமான், ஆலமர் செல்வன், அம்மை பிள்ளையாரிருவர், முடிவிலடியார் ஆகிய திருவுருவங்கள் ஆற்றல் நிலையாகும். ஆற்றல்நிலை ஒன்றே தோற்ற ஒடுக்கத் தொன்மை இயற்கைத் தொழிலதாகும்.

மும்பொருள் உண்மை மொழிவதே விழுமிய தமிழ்மொழியின் தனிச்சிறப்பாகும். மும்பொருளாவன: 'இறை, உயிர், தளை' என்பன. இச்சிறந்த குறிக்கோள் திருவருள் கைவந்த தொன்மைத் தமிழ்ப் பெரும் முனிவர்கள் கண்டு வழங்கிய நன்மைக் குறிக்கோளாகும். சங்கமருவிய நூற்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த நூற்கள் தொட்டுப் பின்னுள்ள நூற்கள் எல்லாவற்றிலும் இக் குறிக்கோள் உயிரென ஊடுருவி நிற்றல் காணலாம். அவ்வுண்மை வருமாறு :

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.'

- தொல். பொருள், 649.

முதனூல் : நூன்முதல் - நூலுக்குக் காரணம், கண்டது - திருவுள்ளம் கொண்டது.

'வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது.'

- தொல். பொருள், 188.

யாண்டும் வேண்டிய கல்வி மூன்று இறவாது. மூன்று - மும்பொருள்: இறை, உயிர், தளை.

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.'

- திருக்குறள், 2.

வாலறிவன் - முனைவன்; சிவபெருமான்.

மும்பொருள்களின் மாறா இயல்பும், தொடர்பும், இயல்பாகவே உயர்வற உயர்ந்த மெய்ப்பொருள் உயரும் உரிமையுடைய ஆருயிர்கட்குச் செய்யும் மாறில் உதவியும், அவ்வுதவிவாயிலாக ஆருயிர்கள் ஒன்றோடொன்று அன்புற்று இன்பெய்தி வாழும் எழிலும், அவ்வெழிலால் அருள் பிறத்தலும், அத் திருவருளால் இருள் நீங்கலும், திருவடிப் பேறெய்தியோங்கலும்,

ஒங்கியுயர்ந்தார் அருமறையோ தலும், அகம்புற வழிபாடுகள் ஓவாதியற்றலும், அவற்றால் உலகம் நலம்பெற்று வாழ்தலும் பிறவும் இறைநூல்களிற் காணும் முறையாகும்.

இறைநூல்கள் புகழ்நூல் எனவும் பொருள்நூல் எனவும் இரு வகைப்படும். புகழ்நூற்களைத் தோத்திரங்கள் என்ப. பொருள் நூற்களைச் சாத்திரங்கள் என்ப. இவற்றை ஆளுடைய அரசர் 'சொல்லும் பொருளெலா மானார் தாமே, தோத்திரமும், சாத்திரமுமானார் தாமே' என அருளும் திருமொழியான் உணரலாம்.

திருவருட்கொடையால் நமக்குக் கிடைத்துள்ள புகழ்நூற்களைத் திருமுறை எனவும், பொருள் நூற்களை மெய்கண்ட மறை எனவும் கூறுப. மறை ஈண்டு ஆகமம். திருமுறைகள் பன்னிரண்டு. மெய் கண்டமறைகள் பதினான்கு. இவை முறையே தமிழ் வேதமெனவும் தமிழ் ஆகமம் எனவும் கூறுப. இவையே தமிழகத்துத் திருக்கோவில் வழிபாட்டுக்குத் தலைசிறந்தவை. ஆகமம்; ஆவியின் நிறைவு.

மக்கட்கு மாந்தர் என்னும் ஒரு தலைசிறந்த திருப்பெயர் வழங்குகின்றது. மாந்துதல் - உட்கொள்ளுதல். ஐம்புலனுகர்வும் உட்கொள்ளுதலே யாகும். அம்முறையிற் பார்த்தால் ஆருயிர் அனைத்தும் மாந்தர் என்னும் பெயர்க்கு உரியனவாகும். அங்ஙனமாகாமல் அப்பெயர் பொது நீக்கி மக்களையே வரைந்து சுட்டுவதால் அதற்கோர் சிறப்புப் பொருள் காணுதல் வேண்டும். அது செம்புல உணர்வினில் திருமறைப் பொருள் மாந்துஞ் சீர்மையென்றாகும். திருமறை - உபதேசமந்திரம். அம் மறையினை மாந்துவிப்பாரும், மாந்துவாரும் மாந்தரெனவே அழைக்கப் பெறுவர். அவருள் மாந்துவிப்பாரை 'நிறைமொழி மாந்தர்' என வழங்குவர். அந் நிறைமொழி மாந்தரால் அருளப்பட்டு மெய்கண்டார் செம்புலவுணர்வினால் மாந்தி அவ் வுணர்வின்கண் அஃது என்றும் மாறாது இருத்தலையுள்ளது 'மாந்திரம்' என்றாகும். இரம் - இருத்தல். மெய்கண்டார் - மாணவர். இவ் வுண்மையினை வரும் வெண்பாவால் நினைவு கூர்க :

ஐம்புலனால் மாந்தல் அனைத்துயிர்க்கும் ஆம்பொது
செம்புலனால் மாந்தல் சிறப்பாமால் - இம்பரிடை
மக்கட்கே மாந்துணர்வு மாந்திரமே மந்திரமாம்
தக்கபொருள் மந்திரத்தாம் சாற்று.

செம்புலன் - மெய்யுணர்வு. மாந்திரம் : மந்திரம் என மீஇயிற்று.

புகழ்நூல் பொருள் நூல்கள் அனைத்தும் மந்திரமே அவையனைத்தும் திருவருள் வண்ணமாய்த் திகழ்ந்த நிறைமொழி மாந்தராம் நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்டன. மந்திரமே மறை எனவும் வழங்கப்படும் மந்திரமே மாந்தர் திருவாணை எனவும் வழுத்தப்படும் அவ்வுண்மை திருஞானசம்பந்தப் பெருமானார் பல விடங்களில் 'ஆணை நமதே' என வாய்மலர்ந் தருளியவாற்றான் உணர்க. நிறைமொழி மாந்தர்தம் நீர்மையுரைக்கும் பண்டைத்திருப்பாட்டுக்கண் வருமாறு :

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

- தொல். பொருள், 490.